மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2024
அ.வ.எண்.196/2024

1. பாலன்
2. பெருமாள்
3. முனுசாமி
4. கோவிந்தராஜ்
5. சேகர்
For themselves and on behalf of the public of
Anna Nagar, Kaveri Cross, Navapatti Village,
Mettur Taluk, Salem District. ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாதேஸ்
2. பெருமாள்
3. மாவட்ட ஆட்சியர், சேலம்
4. சார் ஆட்சியர், மேட்டூர்
5. வட்டாட்சியர், மேட்டூர்
6. வட்டார வளர்ச்சி அலுவலர்,
கிராம பஞ்சாயத்து, கொளத்தூர்
7. தலைவர்,
நவப்பட்டி கிராமம் பஞ்சாயத்து ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரி நாராயணன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் தகுதிப்பாடுகளின் அடிப்படையில் உத்தரவிட கோரி மேல்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 1 விதி 8 மற்றும் பிரிவு 151–ன் கீழ் பொது மக்கள் சார்பாக 1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தங்களுக்காகவும், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாகவும், இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்கள் நத்தம் நிலங்களாகும். தாவா 2 வது அயிட்ட சொத்து தென்வடலாக செல்லும் வண்டித்தடமாகும்.

(ii) கிழமேலாக செல்லும் பவானி – மேட்டூர் பிரதான சாலையிலிருந்து தாவா B அயிட்ட தடவழி தெற்காக பிரிந்து செல்கிறது. மேற்படி தடவழியை பயன்படுத்தி தான் ஊர்மக்கள் அனைவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்ல இயலும். நவப்பட்டி பஞ்சாயத்தால் கடந்த 2001ம் வருடத்தில் மேற்படி சாலை அமைக்க தீர்மானம் போடப்பட்டுள்ளது. நத்தம் சர்வே எண்.330/4ல் 0.0059.0 சதுரமீட்டர் (1–1/2 சென்ட்) அளவிற்கு மட்டுமே 1, 2 பிரதிவாதிகள் பெயரில் அரசாங்கத்தால் பட்டா எண்.757 வழங்கப்பட்டுள்ளது.

(iii) அவ்வாறு உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி தனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட HSD பட்டாவின்படி பழைய ச.எண்.114/1ல் தற்போது இவ்வழக்கிலுள்ள B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என கூறியும், தேவையான தரப்பினர்களை சேர்க்காமலும், உண்மை சங்கதிகளை மறைத்தும், ஊர்

பொதுமக்கள் பயன்படுத்தும் வண்டித்தடத்தை அபகரிக்க வேண்டியும், அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார்.

(iv) மேற்படி தீர்ப்பாணைக்கு பின்னிட்டு கடந்த 17.09.2024ம் தேதியில் மேற்படி அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்து தனக்கு தான் பாத்தியப்பட்டது என கூறி, விளம்பர பலகை வைத்ததோடு, மேற்படி நிலத்தில் தனது வாகனங்களை நிறுத்தி, B அயிட்ட தடவழியை ஊர் பொதுமக்கள் பயன்படுத்துவதை தடுத்து பிரச்சனை செய்து வருவதால், ஊர் பொதுமக்கள் சார்பாக மனுதாரர்கள் இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–</u>

<u>(குறிப்பாணையின் பேரில் பதிலுரை இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. மனுதாரர்கள் தங்களுக்காகவும், ஊர் பொதுமக்களுக்காகவும் பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமையற்றவர்கள். ஏற்கனவே அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2சென்ட் நிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

(ii) தாவா B அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள 1/2சென்ட் நிலத்தையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரருக்கு அரசாங்கத்தால் 1985ம் வருடமே HSD பட்டா வழங்கப்பட்டுள்ள

நிலையிலும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தில் கடன் ஒதுக்கீடு பெற்று, மேற்படி நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் 1–1/2 செண்ட் நிலத்தில் வீடு கட்டியும், 1/2 செண்ட் நிலத்தை காலியாக விட்டும், வசித்து வரும் நிலையில், 2001ம் வருடத்தில் மேற்படி B அயிட்ட சொத்து வண்டித்தடமாக ஊர்மக்கள் பயன்படுத்த தீர்மானம் போடப்பட்டது என கூறுவது தவறானதாகும்.

(iii) மேலும் மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு பின்பு மேற்படி தீர்ப்பு படி, 1/2 செண்ட் நிலத்தை அளந்து, தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் கடந்த 28.10.2024ம் தேதியில் வருவாய் துறையில் விண்ணப்பித்ததன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. B அயிட்ட சொத்தானது வண்டித்தடம் என்பதும் முற்றிலும் தவறானதாகும். மேலும் பொது சுகாதார நிலையம், தண்ணீர் தொட்டி, மாரியம்மன் கோவில் ஆகியவற்றிற்கு செல்வதற்கு ச.எண்கள்.331, 329 ஆகியவற்றில் வேறு தடவழிகளும் உள்ளது. மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் தங்களுக்காகவும், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாகவும், இவ்வழக்கை

பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்துக்கள் நத்தம் நிலங்கள் என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்து தென்வடலாக செல்லும் வண்டித்தடம் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் கிழமேலாக செல்லும் பவானி – மேட்டூர் பிரதான சாலையிலிருந்து தாவா B அயிட்ட தடவழி தெற்காக பிரிந்து செல்கிறது என்றும், மேற்படி தடவழியை பயன்படுத்தி தான் ஊர்மக்கள் அனைவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்ல இயலும். நவப்பட்டி பஞ்சாயத்தால் கடந்த 2001 ம் வருடத்தில் மேற்படி சாலை அமைக்க தீர்மானம் போடப்பட்டுள்ளது என்றும், நத்தம் சர்வே எண்.330/4 ல் 0.0059.0 சதுரமீட்டர் (1–1/2 சென்ட்) அளவிற்கு மட்டுமே 1, 2 பிரதிவாதிகள் பெயரில் அரசாங்கத்தால் பட்டா எண்.757 வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) அவ்வாறு உள்ள நிலையில், 1 ம் பிரதிவாதி தனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட HSD பட்டாவின்படி பழைய ச.எண்.114/1 ல் தற்போது இவ்வழக்கிலுள்ள B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என கூறியும், தேவையான தரப்பினர்களை சேர்க்காமலும், உண்மை சங்கதிகளை மறைத்தும், ஊர் பொதுமக்கள் பயன்படுத்தும் வண்டித்தடத்தை அபகரிக்க வேண்டியும், அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் மேற்படி தீர்ப்பாணைக்கு பின்னிட்டு கடந்த 17.09.2024 ம் தேதியில் மேற்படி அ.வ.எண்.20/2021 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்து தனக்கு தான் பாத்தியப்பட்டது என கூறி, விளம்பர பலகை வைத்ததோடு, மேற்படி B அயிட்ட தடவழியை ஊர் பொதுமக்கள் பயன்படுத்துவதை தடுத்து பிரச்சனை செய்து வருவதால், ஊர் பொதுமக்கள் சார்பாக மனுதாரர்கள் இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(v) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தங்களுக்காகவும், ஊர் பொதுமக்களுக்காகவும் பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமையற்றவர்கள் என்றும், ஏற்கனவே அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vi) மேலும் தாவா B அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள 1/2 சென்ட் நிலத்தையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரருக்கு அரசாங்கத்தால் 1985ம் வருடமே HSD பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையிலும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தில் கடன் ஒதுக்கீடு பெற்று, மேற்படி நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் 1–1/2 சென்ட் நிலத்தில் வீடு கட்டியும், 1/2 சென்ட் நிலத்தை காலியாக விட்டும், வசித்து வரும் நிலையில், 2001ம் வருடத்தில் மேற்படி B அயிட்ட சொத்து வண்டித்தடமாக ஊர்மக்கள் பயன்படுத்த தீர்மானம் போடப்பட்டது என கூறுவது தவறானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vii) மேலும் மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு பின்பு மேற்படி தீர்ப்பு படி, 1/2 சென்ட் நிலத்தை அளந்து, தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் கடந்த 28.10.2024ம் தேதியில் வருவாய் துறையில் விண்ணப்பித்ததன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், B அயிட்ட சொத்தானது வண்டித்தடம் என்பதும் முற்றிலும் தவறானது என்றும், மேலும் பொது சுகாதார நிலையம், தண்ணீர் தொட்டி, மாரியம்மன் கோவில் ஆகியவற்றிற்கு செல்வதற்கு ச.எண்கள்.331, 329 ஆகியவற்றில் வேறு தடவழிகளும் உள்ளது என்றும், மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(viii) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரைகள், வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் பேரிலும், கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின்

மதிப்புமிக்க வாதங்கள் கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. தற்போது மனுதாரர்கள் ஊர் பொதுமக்கள் சார்பாக இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ix) இம்மனுவில் மனுதாரர்கள், ஊர்பொதுமக்கள் சார்பாக பிரதிநிதித்துவ அடிப்படையில், இவ்வழக்கை நடத்துவதற்கு பொதுமக்கள் தரப்பில் யாருக்கேனும் ஆட்சேபனை உள்ளதா? என்பது குறித்து இந்நீதிமன்ற உத்தரவுப்படி மனுதாரர்களால் கடந்த 24.10.2024ம் தேதியில் செய்தித்தாள் விளம்பரம் அளிக்கப்பட்டும், அவ்வாறு ஊர் பொதுமக்கள் எவரும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என தெரியவருகிறது. இந்நிலையில் கற்றறிந்த 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்திலும் மேற்படி அ.வ.எண்.20/2021ஆனது 1ம் எதிர்மனுதாரரின் சொத்துரிமை தொடர்பாக 1ம் எதிர்மனுதாரருக்கும், வருவாய் துறைக்கும் இடையே நடைபெற்ற வழக்கு என்பதால், மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்ய கோர மனுதாரர்களுக்கே எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், பிரதிநிதித்துவ அடிப்படையில் மனுதாரர்கள் இவ்வழக்கை நடத்த இயலாது என தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(x) மேற்கண்ட எதிர்வாதத்தை கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்வது யாதெனில், தற்போது தாவா B அயிட்ட சொத்தான பொது தடவழியையும் சேர்த்து மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் தீர்ப்பு பெற்றுள்ளதால், மேற்படி தடவழியை தாங்களும், ஊர் பொதுமக்களும் பயன்படுத்தும் உரிமை பாதிப்படைகிறது என மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையிலும், மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் உள்ள சொத்தின் ஒரு பகுதி தான் தற்போது இவ்வழக்கில் B அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்து எனும் நிலையிலும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள் 3ம் நபர்களாக இருப்பினும் கூட, மேற்படி

வழக்கிலுள்ள சொத்தின் பேரில் தங்களுக்கு உரிமையுள்ளது என்பதையும், மேற்படி தீர்ப்பால் தங்களது உரிமை பாதிப்படைகிறது என்பதையும், ஐயமற நிரூபிக்கும் பட்சத்தில், மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்ய உரிமையுடையவர்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் மேற்படி சங்கதிகள் அனைத்தும் நிகழ்வழக்கின் விசாரணையில் தான் தீர்மானிக்க இயலும் என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(xi) அடுத்ததாக, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், தற்போது கோவில் திருவிழா நடைபெறுவதால், தாவா B அயிட்ட சொத்தின் வழியாக தான் மேற்படி கோவிலுக்கு ஊர் பொதுமக்கள் செல்ல இயலும் என கூறி, மனுதாரர்கள் ஊர் பொதுமக்கள் சார்பாக, மேற்படி வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்வதாக கூறும் நிலையில், மேற்படி கோவிலில் மனுதாரர்கள் எவ்வித பதவியையும் வகிக்கவில்லை எனவும், அவ்வாறு உள்ள நிலையில், மனுதாரர்கள் பிரதிநிதித்துவ அடிப்படையில் ஊர் மக்கள் சார்பாக இவ்வழக்கை தாக்கல் செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(xii) மேற்படி எதிர்வாதத்தை பரிசீலனை செய்கையில், உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 8 ல்,

> “8. One person may sue or defend on behalf of all in same interest:- (i) Where there are numerous persons having the same interest in one suit:-
>
> (a) one or more of such persons may, with the permission of the court, sue or be sued, or may defend such suit, on behalf of, or for the benefit of, all persons so interested;
>
> (b) the court may direct that one or more os fuch persons may sue or be sued, or may defend such suit, on behalf of, or for the benefit of, all persons so interested ...”

என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதாவது வழக்கு சொத்து தொடர்பாக ஒத்த அக்கறையுள்ள அனைத்து நபர்களின் சார்பாக ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரோ இணைந்து ஒரு வழக்கை தாக்கல் செய்யவோ, எதிர்வாதம் செய்யவோ முடியும் என்பது தெரியவருகிறது.

(xiii) அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி கோவிலில் மனுதாரர்கள் எவ்வித பதவியும் வகிக்காததால் இம்மனுவை தாக்கல் செய்ய இயலாது என 1, 2 எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் எதிர்வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் மனுதாரர்கள் மேற்படி ஊரை சார்ந்தவர்கள் அல்ல என்பது இங்கு எதிர்மனுதாரர்களின் எதிர்வாதமல்ல. எனவே தாவா B அயிட்ட சொத்து பொது தடவழி என மனுதாரர்கள் கூறும் நிலையிலும், மேற்படி தடவழியை ஊர்மக்கள் அனைவரும் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ள நிலையிலும், ஊர்மக்கள் சார்பாக பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய மனுதாரர்கள் உரிமையுடையவர்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.07 11:04:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.07 11:04:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.